## நான் முன்னாள் குற்றவாளிதான்

# பலூான் விற்றது குற்றமா?

### ஓர் இளைஞரின் வேதனை



பக்கம் 13

கோலாலம்பூர், ஏப். 7-

நான் பலூன் மட்டும்தான் விற்றேன். போதைப்பொருளை விற்கவில்லை. நான் முன்னாள் குற்றவாளி என்றாலும் என்னை அடிக்கலாமா, எட்டி உதைக்கலாமா, கழுத்தைப் பிடித்து நெரிக்கலாமா, இப்படிக் கொடுமைப்படுத்தலாமா? என்று பலூன் வியாபாரியான முகமட் ஸைனுடின் அஸ்லான் நேற்று கண்கலங்கியவாறு கேள்வி எழுப்பினார்.

நோன்புப் பெருநாள் கொண்டாட சில தினங்கள் இருந்தபோது ஜாலான் துவாங்கு அப்துல் ரஹ்மானில் நடைபெற்ற ரமலான் சந்தையில் இவருக்கும் கோலாலம்பூர் மாநகர் மன்ற அமலாக்கத்துறைப் பணியாளர்களுக்கும் இடையே மோதல் நடந்தது பற்றி அவர் இவ்வாறு தனது மனக்குமுறலை வெளியிட்டார்.

### முதல் பக்கத் தொடர்ச்சி

### நான் முன்னாள் குற்றவாளிதான் ...

நல்ல வழியில் பணம் சம்பாதிக்கத்தான் நான் பலூன் விற்கிறேன். ஹரிராயா நெருங்கி வந்ததால் பகுதி நேரமாக பலூன் விற்க விரும்பினேன். கோஃபில் திடலில் வேலை செய்யும் எனக்கு ஓய்வு நேரம் இருப்பதால் பகுதி நேரமாகப் பலூன் விற்றேன் என்று அவர் நேற்று டாங் வாங்கி போலீஸ் நிலையத்தில் புகார் செய்த பின் நிருபர்களிடம் தெரிவித்தார்.

கடந்த மார்ச் 28ஆம் தேதி நான் சோகோ முன்புறம் பலூன் விற்றேன். எனக்கு ஏப்ரல் 18ஆம் தேதி அறுவைச் சிகிச்சை செய்யப்படவுள்ளது. அதற்குப் பணம் திரட்டத்தான் பலூன் விற்றேன் என்று அவர் சொன்னார். என் மீது ஏற்கெனவே வழக்கு இருப்பதால் நான் ஹலால் வழியில் பணம் சம்பாதிக்க முடியாதா? என் மீது பழைய வழக்கு இருப்பதால் யாரும் என்னை அடிப்பதற்கு அது ஓர் லைசென்ஸ்போல் உள்ளதா என்றும் அவர் கேட்டார்.

என்னைத் தற்காத்துக் கொள்ளவும் குடும்பத்தின் கௌரவத்திற்காகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப்போகிறேன் என்று அவர் மேலும் சொன்னார். நான் மாற விரும்புகிறேன். ஏழையாக இருப்பது அவ்வளவு எளிதல்ல. கஷ்டத்தில் இருப்பதும் அவ்வளவு எளிதான விஷயமல்ல. எனக்கு நடந்தது கொடுமை. அதை நிச்சயம் எதிர்ப்பேன் என்று அவர் கூறினார்.